

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 290 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 18 – திங்கள்கிழமை 01 ஜூன் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 290 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 18 - Monday 01 Jun 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## Silent மூடில் தொடரும் முதலமைச்சர்!

# ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்கு மீண்டும் காவி Paint !

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 1–

எதையும் கண்டு கொள்ளாமல், அநியாயத்தை தட்டிக் கேட்காமல் முதல்வர் இருப்பதால் ஆளுநர் மாளிகையில் திருவள்ளுவருக்கு காவிச்சாயம் பூசியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டித்துள்ளார்.

அவரது கண்டனம் வருமாறு :-

**எப்போதுமே Mute-ல இருக்கிறவர் முதலமைச்சரா இருக்காருங்கிற தைரியத்துல ஆளுநர் மாளிகையில திருவள்ளுவருக்கு மறுபடியும் காவி Paint அடிச்சு இருக்காங்க.**

**தமிழ்நாடு அரசு ஜனவரி மாசத்துல திருவள்ளுவர் நாளை அதிகாரப்பூர்வமா கொண்டாடுது.**

**ஆனா, வைகாசி அனுஷம் திருவள்ளுவர் நாள்னு புதுசா ஒரு உருட்டு எங்கே இருந்து வந்தது?**



**தி.மு.கழக ஆட்சியில இதே மாதிரி வேலையைப் பார்த்த அப்போதைய ஆளுநரை கடுமையா கண்டிச்சோம். சங்கிகளை திருத்துனோம்.**

**இப்போ மறுபடியும் தமிழர்களோட சுயமரியாதையை உரசிப்பார்க்குறாங்க.**



**வள்ளுவரை அவமதிக்கும் பாசிஸ்டுகளுக்கும் - அதை அனுமதிக்கும் #SofaModel அரசுக்கும் என்னுடைய கடும் கண்டனங்கள்.**

**தமிழ்த்தாய் வாழ்த்தை முதல்ல பாட permission கொடுங்கன்னு டெல்லியில**




**கேட்ட மாதிரி, இந்த விஷயத்துலயும் முதலமைச்சர் பயந்து நடுங்கக் கூடாது.**

**சட்டம் ஒழுங்கு விஷயத்துல தான் முதலமைச்சர் Silent ஆ இருக்காருன்னா, கொள்கை எதிரிகள் வள்ளுவருக்கு காவி Paint அடிக்கிற அநியாயத்தை தட்டிக் கேட்கவும் தயங்குறது ஏன்?**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டித்துள்ளார்.

### திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.யை மீது தாக்குதல்!

கொல்கத்தா, ஜூன் 1–

மேற்குவங்கத்தில், திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாண் பானர்ஜி மீது பா.ஜ.க.வினர் தாக்குதல் நடத்திய சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

மேற்குவங்க மாநிலம் ஹூக்ளியில் பா.ஜ.க.வின் அத்துமீறல்களை கண்டித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேற்குவங்கத்தில் கொலையாளிகள் ஆட்சி நடைபெற்று வருவதாக முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி விமர்சித்து வருகிறார்.

இந்நிலையில், ஹூக்ளி மாவட்டத்தில், போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை விடுக்கக் கோரி திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கல்யாண் பானர்ஜி காவல் நிலையத்திற்கு வந்தார். திரிணாமுல் காங்கிரஸ் தொண்டர்களும் அங்கு திரண்டனர். இதற்கு போட்டியாக பா.ஜ.க.வினர் அங்கு திரண்டு முழக்கங்களை எழுப்பினர்.

அப்போது கல்யாண் பானர்ஜி மீது பா.ஜ.க.வினர் சரமாரியான தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் கல்யாண் பானர்ஜி சாலையில் சுருண்டு விழுந்தார். இதனால், அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

### கடற்கரை - செங்கல்பட்டு இடையே மின்சார ரயில் புதிய கால அட்டவணை!

சென்னை, ஜூன் 1–

சென்னை கடற்கரை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் மின்சார ரயில்கள் இயக்கத்தில் புதிய கால அட்டவணை இன்று (ஜூன் 1) முதல் அமல்படுத்தப்படுகிறது.

சென்னை தாம்பரம் செங்கல்பட்டு வழித்தடத்தில் புதிய கால அட்டவணை ஜூன் 1ம் தேதி (இன்று) முதல் அமல்படுத்தப்பட உள்ளது. தற்போது இயக்கப்படும் 212 மின்சார ரயில்களின் சேவை அப்படியே தொடரும். ஆனால், ரயில்களின் இயக்கும் நேரத்தில் மட்டும் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை தாம்பரம், செங்கல்பட்டு, திருமால்பூர் வழித்தடத்தில், புதிய கால அட்டவணைப்படி, அலுவலக நாட்களில் 212 மின்சார ரயில்களும், விடுமுறை நாட்களில் 190க்கும் மேற்பட்ட மின்சார ரயில்களும் இயக்கப்படும். இயக்ககக் காரணம் மற்றும் எழும்பூர் ரயில் நிலைய மறு சீரமைப்பு பணி ஆகியவை காரணமாக, இந்த புதிய கால அட்டவணை அமல்படுத்தப்பட உள்ளது.

மேலும், பயணிகளின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, நெரிசல் மிகுந்த நேரங்களில் (பீக் அவர்ஸ்) இடைவெளி நேரம் குறைக்கப்பட்டுள்ளது. மற்ற நேரங்களில் 15 நிமிட இடைவெளியில் இயக்கும் வகையில் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## த.வெ.க ஆட்சி அமைந்த கடந்த 20 நாளில்

# தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பாலியல் வன்கொடுமைகள்!

## பெண்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கிய அரசு!

சென்னை, ஜூன் 1–

மதுரை திருமங்கலத்தில் கோவில் திருவிழா பொருட்காட்சிக்கு வந்த 13 வயது சிறுமியை நான்கு சிறுவர்கள் சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்த நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தவெக ஆட்சி அமைந்த பின் கடந்த பத்து நாட்களில் மட்டும் நான்கு பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அரங்கேறி இருப்பது, தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலையை கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

மதுரை திருமங்கலம் மாரியம்மன் வைகாசி சித்திரை பொருட்காட்சிக்கு வந்த தெற்கு தெரு பகுதியை சேர்ந்த 13 வயது மாணவியை, தே பகுதியைச் சேர்ந்த 16 வயது கொண்ட நான்கு சிறுவர்கள் ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இதுகுறித்து அறிந்த சிறுமியின் பெற்றோர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து சிறுவர்கள் 4 பேரையும் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பின் சட்டம் ஒழுங்கு நிலை சீர்குலைந்து போயுள்ளநிலையில் கடந்த 10 நாட்களில் மட்டும் 4 பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அரங்கேறி மக்களின் பாதுகாப்பை கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

**சிங்கப்பெண் காவலருக்கும் பாலியல் சீண்டல்!**

தற்போதைய தவெக ஆட்சியில் சாதாரண மக்களுக்கு தான் பாதுகாப்பில்லை என்றால் பெண்களின் பாதுகாப்புக்காகவே அமைக்கப்பட்ட சிங்கப்பெண் அதிரடிப்படையை சேர்ந்த பெண் காவலரும் பாலியல் சீண்டலுக்கு ஆளாகி பரிதவித்து நிற்கும் அவல நிலை தான் தமிழ்நாட்டில் உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையம் ஒன்றில் பிபுரியும் ஆய்வாளர் அதே காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் போலீஸ் ஒருவருக்கு வாட்ஸ் அப் மூலம் ஆபாச குறுஞ்செய்திகளை அனுப்பி மனஉளைச்சல் ஏற்படும் வகையில் நடந்து கொண்டுள்ளார். இதனிடையே, தமிழ்நாடு அரசின் சிங்கபெண் அதிரடிப்படையில் இந்த பெண் போலீசுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அவரை அந்த பணிக்கு அனுப்ப மறுத்து மாற்று பணிகள் வழங்கியதோடு ஆய்வாளர் கொலை மிரட்டலும் விடுத்துள்ளார். ஆய்வாளர் அனுப்பிய குறுஞ்செய்திகளை ஸ்கீரின்ஷாட் எடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு பெண் போலீஸ் அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**மெரினா கடற்கரையில் சிறுமிக்கு பாலியல் சீண்டல்!**

இதனிடையே சென்னை மெரினா கடற்கரையில் 6 வயது சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட குதிரை ஓட்டியை, போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர். மெரினா கடற்கரைக்கு பெற்றோருடன் வந்த 6 வயது சிறுமி, குதிரை சவாரி செய்வதற்காக குதிரை மீது ஏறி உள்ளார். அப்போது குதிரை ஓட்டியான நித்திஷ் என்பவர், குதிரை சவாரி செய்யும் போது 6 வயது சிறுமியிடம் பாலியல் ரீதியாக அத்துமீறி உள்ளார். இதனைக் கண்ட பொதுமக்கள், குதிரை ஓட்டுனரான நித்திசை சரமாரியாக தாக்கி போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

# விவசாயத்தைவிட விளையாட்டு கடினமா?

## அமைச்சருக்கு – விவசாயிகள் சங்கம் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 1–

சென்னையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய விளையாட்டு துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, விவசாயத்தை விட விளையாட்டு கடினமானது என பேசியிருந்தார். ஆதவ் அர்ஜுனாவின் இந்த பேச்சுக்கு, தமிழக விவசாயிகள் சங்க நிறுவன தலைவர் ஈசன் முருகசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் ஆதல் அர்ஜூனா, `விவசாயத்தைவிட விளையாட்டு கடினமானது. விளை யாடுற பசங்களையும் படிக்குற பசங்களையும் ஒரே கிளாஸ் ரூமில் வைத்து படின்னு சொல்றதே தப்பு. அவங்கள ஸ்பெஷலா கவனிக்கணும். அப்ப தான் தமிழ்நாட்டுக்காக சாதிப்பார்கள். மற்ற மாணவர்களோடு அவங்கள கம்பேர் பண்றதே தப்பு.. படிப்பு வீரர்கள்னு எங்கேயும் இல்ல. விளையாட்டு வீரர்கள்னு தான் இருக்கு. விளையாட்டு தான் ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கும்” என்று பேசியுள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு கண்டனம் தெரிவித்து விவசாயிகள் சங்க நிறுவன தலைவர் ஈசன் முருகசாமி அறிக்கை வெளியிட்டுள்ள அவர்,

நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் பஞ்சம், பசி, பட்டினியால் வாடக் கூடாது என்பதற்காகவே, இயற்கைச் சீற்றங்களான மழை, புயல், வெள்ளம், வாட்டி வதைக்கும் வெயில் என அத்தனையையும் தாங்கி விவசாயிகள் உழைத்து வருகின்றனர். மீள முடியாத கடன் சுமை மற்றும் அதன் காரணமாக ஏற்படும் தற்கொலைகள் போன்ற கொடூரமான வாழ்வாதாரப் போராட்டங்களையும் தினசரி எதிர்கொண்டு வருகின்றனர்.

தேர்தலின் போது பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி, விவசாயிகளின் வாக்குகளைப் பெற்றுவிட்டு, பின்னர் ஏமாற்றம் என அத்தனையையும் சகித்துக் கொண்டு, உணவு உற்பத்தியை ஒருபோதும் நிறுத்தாமல் விவசாயிகள் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய கடுமையான சூழல்களுக்கு மத்தியில் உழைக்கும் விவசாயியைவிட, விளையாட்டுதான் கடினமானது என்று அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசியது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அதேநேரம் விளையாட்டு வீரர்களை மதிக்கிறோம். விவசாயிகளின் வாழ்வாதார உழைப்பை குறைத்து மதிப்பிடுவதை ஏற்க முடியாது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 60 சதவிகித பணிகள் நிறைவு!

# சென்னை துறைமுகம் – மதுரவாயல் ஈரடுக்கு மேம்பாலம்!

## விரைந்து முடித்திட பொதுமக்கள் கோரிக்கை!

சென்னை, ஜூன் 1–

சென்னை மாநகரின் நீண்ட கால போக்குவரத்து சவாலுக்கு தீர்வு காணும் மிக முக்கிய மெகா திட்டமான சென்னை துறைமுகம் மதுரவாயல் ஈரடுக்கு மேம்பாலப் பணிகள் தற்போது மெத்தனமாக செயல்பட்டு வருகின்றன. இதனை விரைந்து முடித்திட பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) மற்றும் தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது, மொத்தப் பணிகளில் சுமார் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. 21 கிலோமீட்டர் நீளமுள்ள இந்த ஈரடுக்கு மேம்பாலத் திட்டம் சென்னை நகரின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல ஆண்டுகளாக தாமதமாகி வந்த இத்திட்டம், கடந்த கழக ஆட்சியின் முன்னெடுப்பு காரணமாக தீவிரப்படுத்தப்பட்டு, தற்போது இறுதிக்கட்டத்தை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

குறிப்பாக பூந்தமல்லி நெடுஞ்சாலை, கோயம்பேடு, அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் தினசரி ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு இந்தத் திட்டம் விரைவில் நிவாரணம் அளிக்கும்.

2010ம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்ட இத்திட்டம், சுற்றுச்சூழல் அனுமதி, நிலம் கையகப்படுத்தல் மற்றும் அரசியல் காரணங்களால் பல ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டது. பின்னர் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், கடற்படை, தமிழக அரசு மற்றும் NHAI இணைந்து புதிய ஒப்பந்தம் மேற்கொண்டு ரூ.3,570 கோடி மதிப்பில் திட்டத்தை மீண்டும் உயிர்ப்பித்தனர். இந்தியாவிலேயே தனித்துவமான ஈரடுக்கு மேம்பாலங்களில் ஒன்றாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

கீழ் அடுக்கு நான்கு வழிப் பாதையுடன் உள்ளூர் பொதுப் போக்குவரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரவாயலில் இருந்து கோயம்பேடு வழியாக நேப்பியர் பாலம் வரை செல்லும் வாகனங்கள் இதைப் பயன்படுத்தலாம். முக்கியமாக, இந்த அடுக்கில் உள்ளூர் வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படாது. மேல் அடுக்கு ஆறு வழிப் பாதையுடன் கனரக சரக்கு வாகனங்கள், கன்டெய்னர் லாரிகள் மற்றும் துறைமுகப் போக்குவரத்திற்கு மட்டும் பிரத்யேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் துறைமுக வாகனங்கள் நகரின் உள்ளூர் சாலைகளில் நுழையாமல் நேரடியாக இலக்கை அடைய முடியும்.

சென்னை துரைமுகம், மதுரவாயல் ஈரடுக்கு பாலத்தை விரைந்து முடித்திட வேண்டுமென்று சென்னை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழ்நாடு முழுவதும் ஆய்வு என்ற பெயரில்

# த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் ‘ரீல்ஸ்’ மோகத்தால் அத்துமீறல்!

## விதிமுறை மீறல் - அதிகாரிகள் குமுறல்!

சென்னை, ஜூன் 1 -

தமிழ்நாடு முழுவதும் ஆய்வு என்ற பெயரில் செல்லும் த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள், ஆய்வு நிகழ்வை ‘ரீல்ஸ்’ எடுத்து சமூக வலைதள பக்கங்களில் அப்படியே பதிவு செய்வதால், அவர்களுடன் ஆய்வுக்குச் செல்ல அதிகாரிகள் தயங்கி வருகின்றனர். உடன் செல்ல அதிகாரிகள் தயங்குவது மட்டுமின்றி செய்தித்துறையினரை அழைத்துச் செல்லாமல் தனிப்பட்ட முறையில் கேமரா வீடியோ என்று த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் விதிமுறை மீறி கொண்டுவருகின்றனர் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த தேர்தலில் த.வெ.க. 107 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட்கள், முஸ்லீம் லீக், வி.சி.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி செய்யும் த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் திடீரென்று ஆய்வுக்குச் செல்ல தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு செல்லும் எம்.எல்.ஏ.க்கள், சினிமா பாணியில் கேமரா சகிதமாக அனைத்துத் துறை அதிகாரிகள் மற்றும் கட்சியினரையும் அழைத்துச் செல்கின்றனர்.

தொகுதியில், கடந்த தி.மு.க. ஆட்சியில் நடந்த தவறுகளை சரிசெய்வதாகவும், ‘பொதுமக்கள், கட்சியினர் கூறும் புகார்களுக்கு விரைவில் தீர்வு காண்பதாகவும். உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவதையும் அப்படியே வீடியோ எடுத்து தங்களது சமூக வலைதளப் பக்கங்களில் பரப்புகின்றனர். ஆய்வு நிகழ்வுகளை சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டு. தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வதிலேயே குறியாக உள்ளனர்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது எம்.எல்.ஏ.க்கள் ஆய்வுக்கு அதிகாரிகளை அழைத்துச் செல்லும்போது, தங்களுடன் செய்தி மக்கள் தொடர்பு அதிகாரிகளையும் அழைத்துச் செல்வர். அவர்கள் எடுத்து அனுப்பும் புகைப்படங்கள் மற்றும் செய்திகள் மட்டுமே , பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

ஆனால், தற்போது த.வெ.க. தங்களது கட்சியினரையும் உடன் அழைத்துச் செல்லும் எம்.எல்.ஏ.க்கள், பொது வெளியில் அனைத்து நிகழ்வுகளையும் உடனுக்குடன் வீடியோ எடுத்து பதிவிடுகின்றனர். இதனால், அரசுத் துறை அதிகாரிகள் நெருக்கடிக்கு ஆளாவதால், த.வெ.க.வினரும் ஆய்வுக்குச் செல்ல தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகள் சிலர் ஆய்வு நிகழ்வுகளை அப்படியே ரீல்ஸ் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிடுவதால், சில நேரங்களில் அதுவே த.வெ.க. அரசுக்கு நெருக்கடி ஏற்படுகிறது.

எனவேதான், தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்பு துறையை உருவாக்கி, மக்கள் பிரதிநிதிகளின் ஆய்வு நிகழ்வுகளை ஒவ்வொரு அரசுத் துறை அதிகாரிகள் பார்வைக்கும். ஒப்புதலுக்கும் அனுப்பிய பிறகே. சமூக வலைதளங்களிலும், பத்திரிகைகளிலும் வெளியிடப்படுகிறது.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளையும், நடைமுறைகளையும் த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் பின்பற்றுவதில்லை. அதை அவர்களிடம் எடுத்துச் சொல்லவும் முடியாமல். அப்படியே சொன்னால் தங்கள் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தினாலும், அதிகாரிகள் கண்டும் காணாமல் இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில்

# இடி மின்னலுடன் கனமழை பெய்யும்!

## வானிலை ஆய்வு மைய தகவல்!

சென்னை, ஜூன் 1–

தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில், இன்று முதல் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் இடி மின்னல், பலத்த காற்றுடன் கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது

தமிழகத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 8:30 மணியுடன் நிறைவு பெற்ற 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக கிருஷ்ணகிரியில் 8 செ.மீ மழை பதிவானது. தற்போது மத்திய மேற்கு, தென்மேற்கு மற்றும் குமரிக் கடல் வழியாக காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. சுமார் 5.8 கிமீ உயரத்தில் மத்திய கிழக்கு வங்கக்கடல் முதல் லட்சததீவு வரை மத்திய மேற்கு, தென்மேற்கு மற்றும் குமரிக் கடல் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலவுகிறது.

அதேபோல், வளி மண்டலத்தில் மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளி மண்டல சுழற்சி நிலவுகிறது. மேலும், தென் கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் வளி மண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், ஜூன் 3 ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது.

மேலும், ஜூன் 3 ஆம் தேதி வரை நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழைக்கு வாய்ப்புள்ளது. வெப்பநிலையை பொறுத்தவரையில் தமிழகம் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை, 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் இயல்பைவிட அதிகம் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாயப்புளளது. அதிகபட்ச வெப்பநிலை 3837 செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2825 செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்